பத்திரிக்கை செய்தி

அரசு திட்டத்தின் கீழ் திருமண உதவி தொகை பெற லஞ்சம் கேட்டு பெற்ற அப்போதைய ஊரக நல அலுவலருக்கு 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை மற்றும் ரூ.4,000/- அபராதம் விதித்து தீர்ப்பு

புகார்தாரர் திரு.ரங்கராமி, கன்னடஅல்லி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வசித்து வந்தார். புகார்தாரர் தன்னுடைய மகள் திருமணத்திற்காக கடந்த 2008ம் ஆண்டு சமூக நலத்துறையால் வழங்கப்படும் மூவலூர் இராமமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவி தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் திருமண உதவித்தொகை பெறுவதற்காக மாத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திருமதி.இந்திராணி, ஊரக நல அலுவலர், மாத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலம், கிருஷ்ணகிரி மாவட்டம், தனக்கு ரூ.1,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, கிருஷ்ணகிரி பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது கடந்த 26.09.2008 திருமதி.இந்திராணி, ஊரக நல அலுவலர் புகார்தாராரிடமிருந்து ரூ.1,000/- லஞ்சப்பணம் பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் நேற்று 09.06.2026 திருமதி.இந்திராணி, ஊரக நல அலுவலருக்கு 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மொத்தம் ரூ.4,000/- அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.